ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ச. பிரபவஞு சித்திரைமீ பகுதி ச.
Vol 4. *April & May 1927.* No. 4.

பன்மணித்திரள்.

சக்ரவர்த்தித் திருமகன்திருவுள்ளத்தை ஒரு பக்ஷி புண்படுத்தியது.

இது, திருக்கோஷ்டிநம்பிகளால் அருளிச்செய்யப்பெற்றதாம். நம்பிகளின் அந்திமதசையில் இவருடைய அந்தரங்க சிஷ்யர்கள் நம்பிகளைநோக்கி ஸ்வாமி! இப்பொழுது தேவரீருடைய திருவுள்ளத்தில் நினைத்திருப்பதுயாது? என்று கேட்டார்கள். அப்பொழுது நம்பிகள் 'சக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்தை ஒரு பக்ஷி புண்படுத்தியது' என்று சொல்லிப் பற்றற்றவராய் ஆளவந்தாருடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு திருநாட்டிற் கெழுந்தருளினர்.

இங்குச் சக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்தைப் புண்படுத்திய பக்ஷியாவது கபோதமாம். (புறுவாம்) ஸ்ரீவிபீஷணாழ்வான் ராவணனால் நிந்திக்கப்பட்டுத் தன் மனைவி மக்கள் முதலியோர்களையெல்லாம் துறந்து ஸ்ரீராமபிரானையே தஞ்சமாக அடைந்தகாலத்து ஹநுமானைத்தவிர மற்ற வானரவீரரெல்லாம் 'இந்த விபீஷணனைக் கொல்லவேண்டும்; இவனுக்கு அடைக்கலந்தரலாகாது.' என்று தடுத்தார்கள்.

அப்பொழுது ராமபிரான் அவர்களைநோக்கி * ஒருவேடன்

---

* "பேடையைப்பிடித்துத்தன்னைப் பிடிக்கவந்தடைந்த பேதை
வேடனுக்குதவிசெய்துவிறகிடைவெந் தீமூட்டிப்
பாடுறுபசியைநோக்கித் தன்னுடல்கொடுத்த பைம்புள்
வீடுபெற்றுயர்ந்தவார்த்தைவேதத்தின்விழுமிதன்றே."

வேட்டையாடச்சென்றகாலத்தில் ஒரு மரத்தில் பேடையுடன்கூடி நின்ற புருவைக்கண்டு முன்பு பேடைப்புருவைப் பிடித்துக் கூட்டிலடைத்துவிட்டுக் காட்டிடங்களைச் சுற்றினன். அதுசமயம் மழை பெய்யு அதில் இவன்நனைந்து களைப்புற்றுத் தங்குதற்குப் பிறிதிடமில்லாமல் ஆண்புருவிருந்த மரத்தடியில்வந்து தங்கினன். அப்பொழுது அப்புரு 'இவன் நமதில்லம்வந்து சேர்ந்தான்; இவனை ஆதரிக்க வேண்டும்' என்று இவனது நிலைகண்டு சுள்ளிவிறகுகளைக் கொணர்ந்து தீமூட்டிஇவனுடைய குளிரையகற்றி மேலும் இவன்பசிப்பிணியால் வருந்துவதைக்கண்டு 'நாம் இவனுக்கு உணவாகிவிடுவோம்' என்று தீயிற்பாய்ந்தது. என்ற விருத்தாந்தத்தை நீங்களறிந்திலீர் போலும்; என்றார்.

இதன்மேலும் ராமபிரான் தமக்குட் சிந்திக்கலாயினர். அது வருமாறு:— "பகுத்தறிவில்லாத ஒரு புரு தன்னிருப்பிடம் வந்தடைந்தானொருவனை அடைக்கலப்பொருளாக மதித்துத் தன்னை அழியமாறி சரணாகதரக்ஷணம்செய்தது. பகுத்தறிவுடைய நாம் இப்புருவைக்காட்டிலும் என்ன சரணாகதஸம்ரக்ஷணம் செய்தோம்; அடைக்கலப் பொருளிருக்குமிடஞ்சென்று அடைக்கலந்தந்தோமா? அல்லது அடைக்கலம் என்று கூவிவந்தடைந்தானையாவது தாமதிக்காது அவனுக்கு அடைக்கலந் தந்தோமா? ஒன்றுமில்லையே; அந்தோ! நமது சரணாகதரக்ஷணம் யாதாகும்" என்று வருந்தினர். என்பதாம். இதனால், புருவினுடைய செயல் ராமபிரானுடைய திருவுள்ளத்தைத் துன்புறச் செய்ததறியலாம்.

இதனால் திருக்கோஷ்டியூர்நம்பிகள்கொண்ட கருத்தாவது:— அடைக்கலமென்று வந்தடைந்த விபீஷணனுக்கு அடைக்கலந் தந்து ரக்ஷித்தவிடத்திலும் 'நாம் என்ன ரக்ஷணம் செய்தோம்' (இந்த ரக்ஷணமும் போராது) என்று அதிருப்திகொண்டிருக்கிற பரிபூரணனாகிய ஸர்வேசுவரனிருக்க நமக்கோர் நினைவுண்டோ என்பதாம். நம்பரம் அவனதானால் அவன் நம்மை ரக்ஷிக்கமாட்டானோ? அதுவிஷயத்தில் நமக்கோர் சிந்தைவேண்டுவதில்லையென்பது போந்தபொருளாம்.

அன்றிலினுடைய அவஸ்தைபிறந்தபோதுகாண் ஆத்மஜ்ஞானம் பிறந்ததாகும்.

இந்தவாக்யம், ஸ்ரீ ஆளவந்தாரால் அருளிச்செய்யப்பட்டதாம். இவருடைய திருவடிகளைத் தஞ்சமாகப்பற்றியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் இருவர் ஒருவர்க்கொருவர் மனமாச்சர்யங்கொண்டு வர்த்தித்துவந்தார்கள். ஒருநாள் இவர்கள் ஆற்றிற்குச்சென்று ஆளவந்தாருடன் நீராடிவருகிறபோது இவர்களுடைய நிலைமையறிந்து இவர்களின் மனமாச்சர்யத்தை யகற்றத் திருவுள்ளம்பற்றிய ஆளவந்தார் இவர்களைநோக்கி 'அன்றிலினுடைய அவஸ்தைபிறந்தபோது காண் ஆத்மஜ்ஞானம் பிறந்ததாகும்' என்று உபதேசித்தருளினர். இவர்கள் அன்றுமுதல் மனமாச்சர்யத்தை ஒழித்து ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாது வாழ்ந்துவந்தார்கள்.

இனி, இவ்வாக்யத்தின் பொருள் விரித்துரைக்கப்பெறும். ஆழ்வார் "பயிலும்சுடரொளி" என்ற திருவாய்மொழியில் "எம்மையாளும் பரமரே" என்றும், "எம்தொழுகுலம்" என்றும் பாகவதர்களை தமக்குச் சிறந்த தலைவரென்றும், குலதெய்வமென்றும் அருளிச்செய்தார். மேலும் உலகத்தில் பலர் ஐசுவர்யமே புருஷார்த்தமென்றிருப்பார். ஒரு சிலர் ஆத்மலாபமே புருஷார்த்தமென்றிருப்பார். சிலர் எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பதே புருஷார்த்தமென்றிருப்பார். இங்ஙனமிருப்பவர்களுடைய புருஷார்த்தங்களெல்லாம் நான் பற்றிய பாகவதசேஷத்வமாகிற (அடியார்க்கடிமையாயிருக்கிற) புருஷார்த்தத்திற்கு ஒப்பாகமாட்டா. இந்தப் பாகவதசேஷத்வமே எனக்கும் என் சம்பந்தமுடையார்க்கும் காலதத்வமுள்ளவரை வாய்க்கவேண்டும் என்று 'நெடுமாற்கடிமை" என்ற திருவாய்மொழியில் பிரார்த்தித்தார். அது வருமாறு:—

"நெடுமாற்கடிமைசெய்வேன்போலவனைக்கருதவஞ்சித்துத்
தடுமாற்றற்றதீக்கதிகண்முற்றும்தவிர்ந்தசதிர்நினைந்தால்
கொடுமாவினையேனவனடியாரடியேகூடுமிதுவல்லால்
விடுமாறென்பதென்னந்தோவியன்மூவுலகுபெறினுமே."

என்பதாம். இதன் பொருள் அடியார் விஷயத்தில் மிக்க அன்புடைய ஸர்வேசுவரனுக்கு அடிமைசெய்பவனைப்போல அவனை நினைத்தவளவிலே அநுபவித்துப் போக்கத்தக்க கொடிய பாபங்க

ளெல்லாம் என்னை வஞ்சித்துத் தவிர்ந்தன. இனி, அடைவதை நினைத்தால் ஸர்வேசுவரனுடைய அடியார்களின் திருவடிகளையே தஞ்சமாக அடைவதொழிய பரந்தமூவுலகத்தின் ஐசுவர்யத்தைப் பெற்றாலும் மஹா பாபத்தையுடைய நான் அந்த அடியார்கட்கு அடிமையாயிருக்கும்வகையை விடுவதெப்படி? அந்தோ! எவ்வாற்றாலும் அவர்களை விடுமாறில்லை என்பதாம்.

இதனால் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் தமக்குப் பாகவதர்களே சிறந்த தலைவரென்றும், போக்யர்களென்றும் கொண்டுள்ளாரென்பது வெளியாயிற்று. மேலும் ஆராய்ந்தால் பாகவதர்கள், பகவத் பக்தியையும், வைராக்யத்தையும், பகவத் ஜ்ஞானத்தையும் விர்த்திசெய்யத் தக்கவர்களாய், உசாத்துணையாயிருப்பார்கள். இன்னும் இவர்கள், அங்கு (பரமபதத்தில்) சென்றுறையும் போதும் உசாத்துணையாயிருப்பார்கள். ஆகவே இவர்கள் இங்குறையும்போதோடு அங்குறையும்போதோடு வாசியற உசாத்துணைவராயிருப்பதுபற்றியே "அடியார் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்றும், "அடியார் தங்கட் கின்பமிகுபெருங்குழு" என்றும், "எந்தம்மை விற்கவும் பெறுவார்களே" என்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்தார்கள்.

இவ்வளவு பெருமையுடைய பாகவதர்கள் ஒருவரோடொருவர் கூடுகின்றகாலத்து நீரொடு நீர் சேர்ந்ததுபோல மனமொற்றுமையுடையவராயும், விட்டுப்பிரியாத வியல்பினராயு மிருத்தல்வேண்டும்; என்பதற்கு இங்கு அன்றில் பறவையைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டினர். அன்றிலினுடைய அவஸ்தை பிறந்தபோது என்றது அன்றில் பறவையின் நிலைமைவந்தபோதென்றவாறு. ஆத்மஜ்ஞானம் பிறந்ததாகும்! என்றது உண்மை அறிவுண்டாயிற்றென்று அறியலாகுமென்றவாறு. அன்றில் பறவை மனமொற்றுமையுடையதாய் ஒன்றைவிட்டு ஒன்று விட்டுநீங்கலாற்றாது கழுத்தைக் கட்டிக் கொண்டிருக்கும். அதுபோல பாகவதர்கள் மனமொற்றுமையுடையவர்களாய் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாதிருத்தல்வேண்டுமென்பது பெறப்படும்.

ஸ்ரீ:

சீலம்.

ஸர்வேசுவரனிடத்திலுள்ள எண்ணிறந்த கல்யாண குணங்களுள் ஸ்வாமித்வ (சொத்தையுடையவனுயிருத்தல்) வாத்ஸல்ய, (தோஷத்தைப் போக்யமாகக்கொள்ளுதல்) ஸௌசீல்ய, ஸௌலப்ய (சுலபனுயிருத்தல்) ங்கள் என்ற நான்கு குணங்களும் சிறந்தனவாம். இந்த நான்கு குணங்களும் அவனிடத்திலிருக்கின்றமையால் எல்லோரும் அவனைச் சுலபமாய்ச்சென்று பற்றுகிறுர்கள். ஆதலால் இக்குணங்கள் அவனையே தஞ்சமாகவடைகின்றவர்கட்கு ஸௌகர்யந்தரும் தன்மையனவாய்விளங்கும். ஆகையால் இவை, ஆசிரயண ஸௌகர்யார்த்தகமான குணங்களென்று வழங்கப்பெறும். "கார்யஞ் செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம், ஸ்வாமித்வம் கண்டகலாமைக்கு ஸௌசீல்யம், குற்றங்கண்டு வெறுவாமைக்கு வாத்ஸல்யம், கண்டுபற்றுகைக்கு ஸௌலப்யம்" என்று லோகதேசிகன் இக்குணங்களின் உபயோகங்களைப் பிரித்தருளிச் செய்ததும் இங்கறியத்தக்கது.

இது நிற்க; இந்நான்கு குணங்களுள் சீலமாவது:— அறப்பெரியோன் தாழ்ந்தவனோடு புரையறக்கலந்து பரிமாறுவதோர் குணவிசேஷமாம். இக்குணமுடையான் தாழ்ந்தவனோடு கலக்கின்ற காலத்து 'உயர்ந்தோமாகிய நாம் இவனோடு கலக்கிறோம்; இதனுல், இவனுக்கோர் நன்மையுண்டு' எனக் கருதாமல் இவனோடு கலப்பதால்தனக்கோர் நன்மையுளதாக எண்ணிக் கலப்பதாம்.

இக்குணத்தை வராகரூபியான எம்பெருமானிடத்திலும், அர்ச்சுனனுக்குச் சாரதியாய்நின்ற கண்ணபிரானிடத்திலும் விளக்கமாகக் காணலாம். அது வருமாறு:—

"பாசிதூர்த்துக்கிடந்தபார்மகட்குப்பண்டொருநாள்
மாசுடம்பில்நீர்வாராமானமிலாப்பன்றியாம்
தேசுடையதேவர்..............".

பூமிப்பிராட்டியாரை ப்ரளயவெள்ளங்கொள்ள அதனுல் அப்பிராட்டியாரின் திருமேனி பாசிபடர்ந்திருந்தது. அன்புடையாள் துன்புற்றிருக்க அவள் மாட்டன்புடையான் எங்ஙனம் இன்புறுவது? இர்

திலேகண்ட ஸர்வேசுவரன் பிராட்டியை ப்ரளயவெள்ளத்தினின்றும் எடுப்பதற்கு நீருக்கும், சேற்றிற்கும் பின்வாங்கவும் 'உடம்பிலழுக் கேறிற்று' என்று லஜ்ஜிக்கவுமாட்டாத ஜன்மத்தையெடுத்துக்கொண் டான். அப்பொழுது 'உயர்ந்தோமாகிய நாம் இவ்விழிவுடைய ஜன் மத்தை எடுத்துக்கொண்டோம்' என்ற அபிமானம் சிறிதும் அவ னுக்கு நடையாடிற்றில்லை. மாரீசன் மாயாமிருகமாகவந்தபோது மற்ற மிருகம் மோந்துபார்த்துத் 'தம்மினமில்லை' என்று விலக்கி யதுபோலில்லாமல், மற்ற வராகங்களும் மோந்துபார்த்துத் தம்மின மென்று தழுவிக்கொள்ளும்படி அபிமானத்தை அகற்றினன். இங்ஙனமகற்றியவிடத்தும் பாரார்த்தமாகக்கொண்ட அவதாரமாத லால் அதற்கு ஒளிவிஞ்சியது. இங்கு வராகரூபியான எம்பெருமான் ஈசுவராபிமானத்தை ஒழித்துத் தாழநின்ற இது, சீலகுணமென் றுயெத்தக்கது.

கண்ணபிரான் பார்த்தசாரதி என்ற பெயரை வஹித்துநின்ற போது அர்ச்சுனன் கண்ணபிரானைநோக்கி நண்ப! யாதவ! இரண்டு சைன்யங்கட்குமிடையில் ரதத்தை நிறுத்தக்கடவாய் என்று ஏவிக் காரியங்கொள்ளும்படி தன்னைத் தாழவிட்டிருந்தான். அப்பொ ழுது கண்ணபிரானுக்கு 'உயர்ந்தோமாகிய நாம் இங்ஙனமிருக்கின் றோம்' என்ற எண்ணம் நடையாடியதில்லை. சீலகுணமுடையார்க்கு இந்நிலை எங்ஙனம் நிகழும்?

இது நிற்க; மனம், வாக்கு, காயமென்ற திரிகரணங்களால் எவ்வுயிர்க்கும் மோகஞ்செய்யாதிருத்தல், அநுக்ரஹம், தானம் என்ற இவற்றை மேற்கொண்டிருப்பதற்கும் சீலம் என்று வழங்கப் பெறும். இந்தக் குணம் யாரிடத்திலிருக்கிறதோ அவர்களே சிறந்த வராக மதிக்கப்படுவார்கள். இதுவிஷயம் இங்கு ஒரு இதிஹாஸ முகத்தால் விளக்கப்பெறும். அது வருமாறு:—

தர்மபுத்ரர் பீஷ்மரைநோக்கி அறிவிற் சிறந்தவரே! உலகில் தர்மத்திற்குச் சீலமே முதற்காரணமாகுமென்று கொண்டாடுகிறார் கள். அத்தகைய சீலத்தை எவ்வாறடைவது? அது என்ன லக்ஷண முடையது? எனக்கு அதை உபதேசிக்கவேண்டுமென்று பணி வுடன்கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

தர்மபுத்ரரே! நீர் ராஜஸூயம் என்ற மஹத்கார்யத்தை முடித்து இந்திரப்ரஸ்தத்தில் ஸகல ஐசுவர்யங்களும் நிரம்பப் பெற்றுச் சுகமாக வாழ்ந்துவருவதைக்கண்ட துர்யோதனன் பொறாமைகொண்டு தன் தந்தையாகிய த்ருதராஷ்டிரனை அணுகி தந்தையே! தர்மபுத்திரருடைய ஐசுவர்யத்தின் பெருமையை நான் என்னென்பேன்! அவருடைய க்ருஹத்தில் மஹாத்மாக்களும் கல்வியிற் றேர்ச்சி பெற்றவர்களுமான பதினாயிரம் பேர்கள் ஸ்வர்ணபாத்திரத்தில் புஜிக்கிறார்கள்; அவரது ஸபையும் தேவஸபைக்கு ஒப்பாக விளங்குகிறது; அவரதுபோகமும் இந்திரபோகத்திற்கு ஒப்பாமன்றோ! இவற்றைக்கண்ட என் மனமாற்றாது சோகமுறுகிறது; என்செய்வேனென்றான்.

அப்பொழுது த்ருதராஷ்டிரன் புதல்வனை நோக்கி மக்களிற் சிறந்த மகனே! நீ சோகத்தை ஒழிப்பாய்; இப்பொழுது யுதிஷ்டிரனிடத்தில் எவ்வளவு ஸம்பத்துளதோ அவ்வளவு ஸம்பத்தைப் பெறுவது, அதனினும் சிறந்த ஸம்பத்தையாவது நீ அடைய விரும்புவையேல் சீலகுணத்தைக் கைக்கொள்வாய்; சீலகுணத்தால் எல்லா உலகங்களையும் வெற்றிகொள்ளலாம்; இதிற் சந்தேகமில்லை; சீலமுள்ளவர்களால் அடையமுடியாதது ஒன்றுமில்லை; இக்குணத்தை மேற்கொண்டவர்களாயிருந்ததாலன்றோ மாந்தாதா ஓரிரவிலும் ஜனமேஜயன் மூன்று நாளிலும் பூமியை அடைந்தார்கள்; என்று சொன்னான்.

அப்பொழுது துர்யோதனன் தாழ்மையுடன் தந்தையை நோக்கி நீர் முன்புரைத்த சீலத்தை யானடைய விரும்புகிறேன்; அதையடையும்வகையை முறையாகஉரைத்தருளவேண்டும்; என்று வேண்டினான். அப்பொழுது த்ருதராஷ்டிரன் ஓர் பழமையான சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினான். அது வருமாறு:—

அருமைப்புதல்வ! நாரதரால் உபதேசிக்கப்பெற்ற ப்ரஹ்லாதன் சீலத்தை மேற்கொண்டொழுகினமையால் அவனால் இந்திரலோக முதலான மூன்று லோகங்களும் ஜயிக்கப்பட்டன. பின்பு ராஜ்யசம்பத்தை இழந்துநின்ற இந்திரன் தன் குருவாகிய ப்ருஹஸ்பதியை யடைந்து வணங்கிநின்று 'ஸ்வாமி! நான் இப்பொழுது சிரேயஸை அடையவிரும்புகிறேன்; அதற்குரிய உபதேசத்தைச்

செய்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். பிருஹஸ்பதி இவனது நிலைமையறிந்து மோக்ஷத்திற்குக் காரணமான ஜ்ஞானத்தை இவனுக்கு உபதேசித்தார். இந்திரன் இதனினும் சிறந்தவொன்றிருக்குமாகில் அதையும் உபதேசிக்கவேண்டுமென்று மேலும் வேண்டினன். பிருஹஸ்பதி இந்திரனைநோக்கி 'நீ இதனினும் சிறந்தவொன்றைப்பெற விரும்புவையேல் சுக்ராசார்யர்பாற்சென்று கேட்பாய் என்றார்.

உடனே இந்திரன் சுக்ராசார்யரையணுகி அவரை வணங்கி நின்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவரும் இவன்பா லன்பு கொண்டு மோக்ஷத்திற்கு ஸாதனமான ஆத்மஜ்ஞானத்தை உபதேசித்தார். அதன் மேலும் இந்திரன் 'இதற்குமேலான சிரேயஸு இருக்குமாகில் அதையும் உபதேசித்தருளவேண்டும், என்று வேண்டினன். அப்பொழுது சுக்ராசார்யர், மஹாத்மாவாய் விளங்குகிற ப்ரஹலாதனென்பவர் மிக்க அறிவுபடைத்தவர் அவர்பாற் சென்று கேட்பாய் என்றார்.

இந்திரன் பிராம்மண ரூபத்துடன் ப்ரஹலாதன் பாற்சென்று துதிசெய்து 'யான்சிரேயஸை அறியவிரும்புகிறேன்' என்று சொன்னான். ப்ரஹலாதன் பிராம்மணனை நோக்கி எனக்கு மூவுலகைப் புரந்தரவேண்டிய கார்யமிக்குள்ளதினால்ஒழிவுகாலங்கிடைப்பதரிது. ஆதலால் நான் உனக்கு உபதேசஞ்செய்ய இயலாது; என்றார். இந்திரன் அரசரேறே! உம்மிடத்தில் விரும்பிவந்து கேட்கவந்த என்னை அகற்றிவிடக் கருதலாகாது; உமக்கு எப்பொழுது ஒழிவு காலம் கிடைக்குமோ அப்பொழுதாவது உபதேசித்தருள்வீர் என்று வேண்டினன். ப்ரஹ்லாதனும் இவன்பால் இரக்கங்கொண்டு அங்ஙனமே செய்யக்கடவேனென்று நல்ல முஹூர்த்தத்தில் நல்ல ஜ்ஞானத்தை உபதேசித்தார். அதன்பின் இந்திரன் ஸத்குருவினிடத்தில் சிஷ்யன் ஒழுகவேண்டியமுறைப்படி ஒழுகி ப்ரஹ்லாதரின் மகிழ்ச்சிக்கு விஷயமாய் விளங்கினன். ஒருநாள் இந்திரன் ப்ரஹ்லாதரைநோக்கி உமக்கு இந்த மூவுலகின்ஸம்பத்து எவ்வாறு ஸித்தித்தது? அதன் காரணத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும் என்று வேண்டினன்.

"பிராம்மணரே! நான் ராஜாவாயிருக்கிறேன் என்ற அஹங்காரத்தால் பிராம்மணர்களை அவமதிப்பதில்லை; பிராம்மணர்கள் என்னை நோக்கி "நாங்கள் நல்ல உபதேசத்தால் உம்மையடக்குகிறோம்; எங்களுடைய நல்லொழுக்கத்தால் உம்மைத் தாங்குகின்றோம்; எங்களால் உமது செங்கோல் நடைபெறுகிறது" என்று பெருமிதம் தோன்றக்கூறினும் அவ்வுரைகளை ஹிதோபதேசமாகக்கொள்வேனையன்றி அவர்களிடத்திற் பொறுமைகொள்ளமாட்டேன்; கேள்வியில் விருப்புள்ளவனும், அஹங்காரபுத்தியை ஒழித்துத் தர்மத்தில் நோக்கமுள்ளவனும், கோபத்தைவென்றவனும், இந்திரியங்களை யடக்கினவனுமாகிய என்னைப் பிராம்மணர்கள் தேனீக்கள் கூட்டைத் தேனினால் நிரப்புவதுபோலச் சாஸ்திரத்தால் நன்றாக நிரம்பச்செய்கிறார்கள்; பிராம்மணர்களின் உபதேசரஸத்தை அநுபவித்த நான் நக்ஷத்ரக்கூட்டங்கட்குச் சந்திரன்போல என்ஜாதியார்கட்குப் பதியாகவிருக்கிறேன்; பிராம்மணர்களின் நீதிவசனங்களைக் கேட்டுநடப்பதே கண்போலச் சிறந்ததாகும்; அமிருதம்போல இனிமை பயப்பதும் அஃதே; நான் இதுவரையிலு முரைத்தவைகளே சிரேயஸென்று அறியத்தக்கது" என்று உரைத்தார்.

மேலும் பிரஹ்லாதர் பிராம்மணனை நோக்கிச் சாஸ்திரவிதிப்படி குருவினிடத்தில் ஒழுகத்தக்க ஒழுக்கத்தினின்று வழுவாது நின்ற உமது நிலையைக்கண்டு மகிழ்வடைகிறேன்; உமக்கு மங்களமுண்டாகுக; ஏதேனும் என்னிடத்தில் வரம்பெற்றுக்கொள்ள விரும்புவீரேல் கொடுப்பதற்குச் சித்தனயிருக்கிறேன்; என்றார். பிராம்மணன் பிரஹ்லாதரைநோக்கி நீர் என்னிடத்தில் இவ்வளவு விருப்புற்றிருப்பதே போதுமானது; என்றான். அப்பொழுது ப்ரஹ்லாதர் நீர் என்னிடத்தில் வரத்தைப் பெற்றுக்கொள்ளக்கடவீர் என்று வற்புறுத்திக் கூறினர்.

பிராம்மணன், 'ராஜேந்திரரே! நீர் எனக்கு அநுக்ரஹம்செய்ய விரும்புவீரேல் உமதிடத்திலுள்ள சீலத்தைத்தரக்கடவீர்; இதுவே நான்விரும்புகிற வரமாகும்' என்று கேட்டான். அதுசமயம் இந்தப் பிராம்மணன் சிறிய மனமுடையவனல்லனென்று பிரஹ்லாதருக்குப் பெரிதும் பயமுண்டாயிற்று. யாது செய்வார்; கேட்டதைக் கொடுக்கக்கடமைப்பட்டவரன்றோ! பின்பு பிராம்மணரை நோக்கி நீர் விரும்பியபடியே வரத்தைக்கொடுத்தேனென்றுரைத்துச் சிறிது நேரம் சென்றபின் துக்கிக்கலாயினர்.

அதன்பிறகு பிராம்மணன் வரம்பெற்றுச் சென்ருன். உடனே பிரஹ்லாதருடைய சரீரத்தினின்றும் அவரது சாயைபோன்றதும் தேஜோமயமான சரீரத்தையுடையதுமான ஒன்று வெளிவந்தது. பிரஹ்லாதர் அதை நோக்கி நீயார்? என்று கேட்டார். அது 'நான் சீலமாவேன்; உம்மால்விடப்பட்டு உம்மிடத்திற் சிஷ்யனுயிருந்து வரம்பெற்றுச்சென்றவனிடத்திற் செல்லுகிறேன்' என்று மறைந்து தேஜஸானது இந்திரனை அடைந்தது.

பின்பு பிரஹ்லாதருடைய சரீரத்தினின்றும் முன்போலவே ஒரு தேஜஸுடைய ஒருவடிவம் வெளிப்பட்டது. பிரஹ்லாதர் அதை நீயார்? என்று கேட்க அது நான் தர்மமாவேன்; நான் சீலமிருக்குமிடத்திலிருக்கத் தக்கவனன்றே! சீலம் இப்பொழுது உம்மிடம்விட்டகன்று உமக்குச் சிஷ்யவிர்த்தி செய்துகொண்டிருந்த பிராம்மணனையடைந்தது; இதோ நானும் அந்தப் பிராமணனைச் சென்றடையக்கடவேனென்று இந்திரனைவந்தடைந்தது. இதன்மேலும் பிரஹ்லாதருடைய சரீரத்தினின்று மிக்கவொளிபடைத்த மற்ருேர் வடிவு வெளிவந்தது. பிரஹ்லாதர் 'ஈதென்ன ஆச்சர்யம்! ஒன்றன்பின் ஒன்ருய்த் தேஜஸுடைய வடிவு வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றதே' என்று அதை நீயார்? என்று கேட்டார். அது 'நான் ஸத்யமாவேன்; தர்மமிருக்குமிடத்தைப்பற்றியிருக்கும் தகுதியுடையேன்; தர்மம் இப்பொழுது உம்மைவிட்டகன்றதன்றே! அது நிலைநிற்குமிடத்தை நாடிச்செல்வேன்' என்று சொல்லி இந்திரனை வந்தடைந்தது. சிறிது நேரம் சென்றவுடன் பிரஹ்லாதருடைய சரீரத்தினின்றும் ஒளிவுடைய ஒருபுருஷன் வெளிவந்தான். நீயார்? என்று வினவ 'நான் ஒழுக்கமாவேன்; ஸத்யம் எங்கிருக்குமோ அவ்விடத்திலிருக்கும் தன்மையுடையேனென்றறியீரோ?, என்று சொல்லி அகன்ருன். அதன்பின் பிரஹ்லாதருடைய சரீரத்தினின்றும் பெரிய சப்தம் வெளிவந்தது. நீயார்? என்று வினவ அது, 'என்னை நீர் வலிமையென்று அறியீர்போலும்; ஒழுக்கமிருக்குமிடத்தில் உடனுறையுந் தன்மையுடையேன்' என்று விடையளித்துச்சென்றது.

பின்பு பிரஹ்லாதருடைய சரீரத்தினின்றும் தேஜோமயமான ஒருதேவஸ்திரீ வெளிவந்தாள். நீயார்? என்று வினவினர். அந்தத் தேவி, 'நான் லக்ஷ்மியாவேன்; இவ்வளவுகாலம் உம்மிடத்தில் ஸுக

மாக வசித்துக்கொண்டிருந்தேன்; இப்பொழுது உம்மைவிட்டு வலிமை அகன்றதினால் அந்த வலிமையைச்சார்ந்திருக்கின்ற யானும் உம்மைவிட்டு நீங்குதற் குரிமையுடையவளானேன்' என்று விடை பகர்ந்தாள். அப்பொழுது பிரஹ்லாதருக்குப் பெரிதும் பயமுண்டாயிற்று. பின்பு லக்ஷ்மிதேவியை நோக்கித் தேவியே! நீ உலகத்திற் கெல்லாம் மாதாவாயும், ஈசுவரியாயும், ஸத்பவ்ரத முடையவளாயும் விளங்குகின்றாயன்றோ! நீ இப்பொழுது எங்குச்செல்கிறாய்? என்னிடத்திலிருந்த பிராம்மண சிரேஷ்டர் யார்? என்று பணிவுடன் கேட்டார். லக்ஷ்மிதேவி பிரஹ்லாதரைநோக்கி எவன் பிர்ம்மசாரியாக விருந்து உம்மிடம் கல்வியைக் கற்றானோ அவன் இந்திரனாவான். அவன் திரிலோகாதிபதியாதலால் அவனுக்கு மூன்று உலகிலுள்ள ஐசுவர்யங்கள் உரிமையுற்றிருக்கும்; இங்ஙனமிருக்கின்ற மூவுலகங்களும் உமது சீலத்தால் ஜயிக்கப்பட்டன. இதனையறிந்த இந்திரன் சிஷ்யனாய்வந்து உம்மை உகப்பித்து உம்மிடத்திலுள்ள சீலத்தைக் கொள்ளைகொண்டான்; சீலம் எவ்விடத்தில் நிலைபெற்று நிற்கிறதோ அவ்விடத்தில் தர்மமும், ஸத்யமும், ஒழுக்கமும், வலிமையும் நிலைபெறும். அவை நிலைபெறுமிடத்தை நானும் உறைவிடமாகக்கொள்வேன்; ஆகலால்நானும் சீலத்தைக்காரணமாகக்கொண்டவளாவேன்' என்று சொல்லிச்சென்றாள்.

யுதிஷ்டிரரே' இந்தப் பழமையான உபாக்யானத்தை மிகவும் விருப்பமுடன் கேட்ட துரியோதனன் மறுபடியும் தந்தையாகிய த்ருதராஷ்டிரனை நோக்கி இனிச் சீலத்தையான் சுலபமாக அடையும் உபாயத்தை உபதேசிப்பீர் என்று வேண்டினான். த்ருதராஷ்டிரன் அருமைப்புதல்வ! முன்பு இந்தச்சீலம் பிரஹ்லாதரால் உபதேசிக்கப்பட்டுளது. அதையான் இப்பொழுது உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்; கேட்பாய் என்று சொல்லத்தொடங்கினான்.

செய்கையாலும், மனத்தாலும், வாக்காலும் எல்லாப்பிராணிகளிடத்திலும் துரோகமில்லாமலிருப்பதும், அநுக்ரஹமும், தானமுமாகிய மூன்றும் சீலமென்று கொண்டாடப்படுகின்றன; நன்மைதராத செயலையும், நாணத்தக்க செய்கையையும் எவ்வகையாலும் செய்யலாகாது; ஸத்துக்கள் ஸபையில் எது கொண்டாடப்படுமோ அத்தகைய செயலைச் செய்ய முயலவேண்டும்; சீலமில்லாத சிலரிடத்தில் ஸம்பத்து வந்துசேர்ந்தாலும் அதன்பயனை அவர்கள்

நீண்டகாலம் அநுபவிக்கமாட்டார்கள்; ஆதலால் நீ சீலத்தைக் கடைப்பிடித்தொழுகுவாய்; அதனால் உனக்குச்சகல நன்மைகளும் உண்டாகுமென்று உபதேசித்தான். தர்மபுத்திரரே! இவ்வளவு பெருமையுடைய சீலத்தைக் கைப்பற்றி ஒழுகுவீராக; என்றார்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(59-ம் பக்கத் தொடர்ச்சி).

[கீழ் கைவல்யம் நித்யமென்றும், அது நித்யவிபூதியிலுள்ளதென்றும் ஸ்வபக்ஷ நிரூபணம் பண்ணப்பட்டது; இனி அது, பிரகிருதி மண்டலத்திலுள்ளதென்றும், அநித்யமென்றும் சொல்லும் பரபக்ஷ வ்யவஹாரமிருக்கும்படியும் அதற்குச் சமாதானமும் சொல்லப்படும்.]

ஸ்ரீபாஷ்யத்தில் கார்யாதிகரணத்தில், 'ஸ்ருதிகாமம்வைநாந்யதி' 'அப்ரதீகாலம்பநாந்நயதி' என்கிற ஸூத்ரவ்யாக்யாநவஸரத்தில்; பஞ்சாக்நிவித்யாநிஷ்டனை கேவலனுக்கு அர்ச்சிராதிகதி சொல்லியிருப்பதால் அர்ச்சிராதிகதி யுள்ளவனுக்கு ப்ரஹ்மப்ராப்தியும் அபுநராவ்ருத்தியும் ப்ரமாணஸித்தங்களாகையால் தத்க்ரதுந்யாயத்தாலே ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸநம் உள்ள பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு அவசியம் ப்ரஹ்மப்ராப்தியுண்டென்று ஏற்படுகிறது. கீதாபாஷ்யத்தில் ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தி பலமென்று சொல்லியிருக்கிறது. இந்த இரண்டு பலங்களும் ஏககாலத்திலுண்டாகுமென்று சொல்லவொண்ணாது. ஆதலால் பூர்வம் ஆத்மாநுபவமும் பச்சாத் ப்ரஹ்மாநுபவமும் ஏற்படுமென்று கொள்ளவேணும். மதுவித்யையில் கார்யாவஸ்த காரணாவஸ்த ப்ரஹ்மோபாஸநத்தை விதித்து, அதற்கு பலமாக பசுவாதிபதப்ராப்தியும் பின்பு ப்ரஹ்மப்ராப்தியும் சொல்லியிருப்பதுபோல் இங்குங் கொள்ளவேணும்.

இத்தையநுஸரித்தே பாரதத்தில் சாந்திபர்வத்தில் மோக்ஷதர்மத்தில், '𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 𑌮𑌮 𑌜𑌨𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌏𑌵 𑌹𑌿 𑌤𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃' 'சதுர்விதாமமஜநா: பக்தா ஏவஹிதே ஸ்ம்ருதா:' என்று தொடங்கி, '𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚𑍍𑌯𑌵𑌨𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍁 𑌮𑍋𑌕𑍍𑌷𑌭𑌾𑌕𑍍' 'ஸர்வேச்சயவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்' என்றிருப்பதால் கைவல்யரூபமான ஆத்மாநுபவம் அவாந்தரபலமாகையாலே அநித்யமென்று கொள்ளவேணும். இந்தச்லோகம் கீதையில் '𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌜𑌨𑌾𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨' 'சதுர்விதாபஜந்தேமாம் ஜநாஸ்ஸுக்ருதிநோர்ஜுந' என்கிற ச்லோகார்த்தாநுவாதமாக ஏற்படுவதால், 'சதுர்விதாமமஜநா:' என்கிறதினுல் அபூர்வைசுவர்யகாமன், ப்ருஷ்டைசுவர்யகாமன், ஆத்மப்ராப்தி காமன், பகவத் ப்ராப்திகாமன் என்கிற நாலு அதிகாரிகளையும் சொல்லி, மேல் 'ஸர்வேச்ச்யவநதர்மாண:' என்கிறவித்தால் பகவத்ப்ராப்திகாம வ்யதிரிக்தர்களான மூவரும் ச்ச்யவநதர்மாக்கள்; பகவத்ப்ராப்திகாமனுன ப்ரதிபுத்தன் மோக்ஷபாக் என்று சொல்லுகிறது. அதில் மூவரும் ச்ச்யவநதர்மாக்கள் என்கிறவிடத்தில் ச்ச்யவநமாவது நழுவுதலாகையாலே தங்கள் தங்கள் பலங்களுடைய நழுவுதலைச் சொல்லுவதால் அவரவர்களுடைய பலம் அநித்யமென்றேற்படுகிறது. அதனுல் கைவல்யம் அநித்யமென்றுதான் கொள்ளவேணும்.

மதுவித்யாந்யாயத்தாலே கேவலனுக்கு பகவத்ப்ராப்தி ஸாக்ஷாத்பலமாயிருப்பதால் அவாந்தரபலமான ஆத்மாநுபவச்ச்யுதி நிந்தைக்கு ஹேதுவாகமாட்டாமையாலே ஐசுவர்யார்த்தியோடே இவனையும் சேர்த்துச்சொல்லுவது அஸங்கதம்.

ஆதலால் 'ச்ச்யவநதர்மாண:' என்பதற்கு பகவதநுபவச்ச்யுதிரூபதர்மத்தையுடையவர்கள் என்று சொல்லவேண்டுகையால் அது நிந்தாஹேதுவாகையாலும், ஐசுவர்யார்த்தியோடு ஸஹபடித்துச் சொல்லுவது ஸங்கதமாகையாலும் இதைக்கொண்டு கைவல்யம் அநித்யமென்று சொல்லவொண்ணுது எனில், கீழ் நிரூபித்தபடி ஆத்மப்ராப்தியும், ப்ரஹ்மப்ராப்தியும் அவாந்தரபலமாகவும் ஸாக்ஷாத்பலமாகவும் சொல்லவேண்டியது ஆவசியகமாகையாலே 'ச்ச்யவநதர்மாண:' என்கிற இடத்தில் ச்ச்யவநம் அவாந்தரபலமான ஆத்மா

நுபவத்தினுடைய ச்ச்யவநமென்றே கொள்ளவேணும். மேல் உத்கிருஷ்டமான பகவத் ப்ராப்திபலம் ஏற்படுவதால் பூர்வபத ப்ரம்சம் நிந்தாவஹமாகமாட்டாதேயென்னில், 'ஊ ரு லோகாக்வரிஹ்ருஷ்:' 'இந்த்ரலோகாத்பரிப்ருஷ்ட:' என்று மேல்வரப்போகிற உத்கிருஷ்ட பலத்திற்கு பூர்வபாவியான இந்திரலோக பரிப்ரம்சத்தை 'பரிப்ருஷ்ட:' என்பதனுல் சொல்லியிருப்பதுபோல், இங்கே ஆத்மாநுபவ பரிப்ரும்சமும் ச்ச்யவனமென்றே வ்யவஹரிக்கலாமானுலும் நிந்தாவஹமாகமாட்டாதே யென்னில், இதுவும் ஐசுவரியம்போல் அநித்ய மென்று கொள்வதே விவக்ஷிதம்.

அதுவுமன்றிக்கே ஆத்மாநுபவ காலத்தில், பகவதநுபவச்ச்யுதி ஏற்படுகிறபடியால் ஜ்ஞானியைப்போல் அவ்பவதாநேந பகவத் ப்ராப்தியில்லாமையைப்பற்ற 'ச்ச்யவநதர்மாண:' என்கிறஇடத்தில் ச்ச்யவநம் பகவதநுபவச்யவநம் என்றும் சொல்லலாம், ஆனுல் அப்படி அநித்யமாயிருக்கும்பக்ஷத்தில் அந்த ப்ரக்ருதி வியுக்தாத்மாநுபவம் ப்ரக்ருதிமண்டலத்தில் கூடாதாகையாலே தத்பஹிர்ப்பூதமான நித்ய விபூதியினுடைய ஏகதேசத்தில் சொல்லவேண்டுகையாலே அநித்யமாகமாட்டாதே என்னில், ப்ருக்ருதிவியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தி என்கிற இடத்தில் ப்ரக்ருதிவியோகம் ஸ்தூலப்ரக்ருதிவியோகமாகை கயால் ப்ரக்ருதி மண்டலத்திலேயே அந்த அநுபவம் கூடும். அங்ஙனமன்றிக்கே ஆத்ம ஸ்வரூபாவாப்தி என்பது அநுபவரூபமாகையால் இந்த ஆத்மாநுபவம் ப்ரக்ருதியை விஷயீகரியாமலும், பகவத் ஸ்வரூபத்தை விஷயீகரியாமலும் ப்ரக்ருதி மண்டலத்திலே வரக்கூடுமாகையால் ப்ரக்ருதி பஹிர்ப்பூத ஸ்தலத்தில் வரவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை.

ஆதலால் ப்ரக்ருதிவியுக்த என்கிற இடத்தில் ப்ரக்ருத்ப விஷயமென்றே அர்த்தம் கொள்ளவேணும். ஆனுல் மோக்ஷம் என்று வ்யவஹாரம் எங்ஙனே என்னில், வீதராகபயக்ரோத: யஸ்ஸதா முக்தஏவஸ:' 'வீதராக பயக்ரோத: யஸ்ஸதா முக்தஏவஸ:' என்பது போல் கௌணமாகக்கொள்ளவேணும். இப்படிச் சொல்லும்பக்ஷத்தில் கேவலனுக்கு ஸுஷும்நா நாடியாலே நிஷ்க்ரமணமும் அர்ச்சிராதிகெதியும் சொல்லியிருப்பதால் இதுகளையுடையவனுக்கு 'ஸநாதநு ப்ரஹ்மமயதி' 'ஸநாதநப்ரஹ்மகமயதி' என்கிற சுருதியின்

படி அவ்யவதாநேந ப்ரஹ்மப்ராப்தி ஏற்படுமென்று கீதாபாஷ்யத்திலும், வேதாந்ததீபத்திலும் கார்யாதிகரண ச்ருதப்ரகாசிகையிலும் சொல்லியிருப்பதால் அவாந்தரபலமான ஆத்மாநுபவம் கூடும்படி எங்ஙனேயென்னில், பாரதத்தில் மோக்ஷ தர்மத்தில் ஜாபகோபாக்யாநத்தில், ஜாபகனென்கிற அதிகாரி ப்ரஹ்மப்ராப்தியாகிய பலத்தை உத்தேசித்து ஸம்ஹிதா ஜபமுதலான கார்யங்களைச்செய்து கொண்டு வந்தபடியால் அவனுக்கு மூர்த்தந்யநாடியாலே நிஷ்க்ரமணமும் அர்ச்சிராதிகதியும் சொல்லி அவாந்தரபலமாக சதுர்முக ப்ரஹ்மலோகத்தில் ப்ரஹ்மகாயநிஷேவணமாகிய அவாந்தரபலத்தை அநுபவித்து பச்சாத்ப்ரஹ்மப்ராப்தியடைந்திருப்பதாய்ச் சொல்லியிருப்பதாலும், தைத்திரீயோபநிஷத்தில் சிக்ஷாவல்லியில் வ்யாஹ்ருத்யுபாஸநத்தை அங்கமாகவுடைய ப்ரஹ்மோபாஸந உபதேச ப்ரகரணத்தில் 'ஸ்ரீர்பு4வஸ்ஸுவரிதிவா' 'பூர்புவஸ்ஸுவரிதிவா' என்றுதொடங்கி, 'ஸ யஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாச:' 'ஸயஏஷா அந்தர்ஹ்ருதயஆகாச:' என்று ப்ரஹ்மோபாஸநத்தைச் சொல்லி, 'அந்தரேண தாலுகே' 'அந்தரேண தாலுகே' இத்யாதியாலே மூர்த்தந்ய நாடியாலே நிஷ்க்ரமணத்தைச்சொல்லி அக்நியாதிலோகங்களில் சிலகாலமிருந்து பின்பு, 'ஆப்நோதி ஸ்வாராஜ்யம்' 'ஆப்நோதி ஸ்வாராஜ்யம்' இத்யாதியால் பரமபதப்ராப்தியும் சொல்லியிருப்பதாலும்,

இப்படியே தைத்திரீயோபநிஷத்தாலேயே தக்ஷிணாயநத்தில் சரீரவியோகம் வந்த உபாஸகனுக்கு அர்ச்சிராதிகதியைச்சொல்லி சந்த்ரஸாயுஜ்யத்தை அவாந்தரபலமாகச் சொல்லியிருப்பதாலும், இப்படியே உத்தராயணத்தில் ம்ருதனான உபாஸகனுக்கு ஆதித்ய ஸாயுஜ்யத்தை அவாந்தரபலமாகச் சொல்லியிருப்பதாலும், அர்ச்சிராதிகதியாலே போகிறவர்களுக்கு அவாந்தரபலாநுபவம் உண்டென்று ஏற்படுகிறபடியால், கேவலனுக்கும் அர்ச்சிராதிகதி ஏற்பட்டிருந்தாலும் அவாந்தரபலமான ஆத்மாநுபவம் கூடும்.

ஜாபகோபாக்யானவிஷயங்களான சுலோகங்கள்:—

‘[illegible]’ ‘ஜாபகாநாம்பலாவாப்திம்ச்ரோது, மிச்சாமிபாரத,கிம்பலம் ஜபதாமுக்தம் க்வவாதிஷ்டந்திஜாபகா:’ என்று, தர்மபுத்ரர் பீஷ்மரிடத்தில், ஜாபகர்களுக்கு பலம் என்ன; ஜாபகர்கள் எவ்விடத்திலிருக்கிறார்கள்? என்று கேட்க, ‘[illegible]’ ‘ஏஷப்ரவர்த்தகோயஜ்ஞ:’ என்று ப்ரவர்த்திதர்மநிஷ்டனான ஜாபகனுடைய ஜபக்ரமத்தை நிரூபித்து, ‘[illegible]’ ‘‘நிவர்த்தகமதோச்ருணு, யதாநிவர்த்ததே கர்மஜபதோ ப்ரஹ்மசாரிண:, ஏதத்ஸர்வமசேஷேண யதோக்தம் பரிவர்த்தயேத், விரதம்மார்க்கமாஸாத்ய வ்யக்தா வ்யக்தமநாசிரயம்’’ என்று நிவ்ருத்திதர்மநிஷ்டனான ஜாபகனுடைய உபாஸநக்ரம நிரூபணத்தைச்சொல்லி, ‘[illegible]’ ‘தத்தியாத்யாயதி ப்ரஹ்மஜபந்வைஸம்ஹிதாப் ஹிதாம்’ இத்பாதியாலே ஸம்ஹிதாஜபபூர்வகமாக ப்ரஹ்மத்யாநத்தை விதித்து, ‘[illegible]’ ‘ஸவைதஸ்யாமவஸ்தாயாம் ஸர்வத்பாகக்ருத: ஸுகம், நிரிச்சஸ்த்யஜதிப்ராணாந் ப்ராஹ்மீஸம்விசதேதநும், அதவா நேச்சதே தத்ரப்ராஹ்மீகாயநிஷேவணம், உத்க்ராமதிசமார்க்கஸ்த: நைவ க்வசந ஜாயதே, ஆத்மபுத்யா ஸமாஸ்தாய சாந்தீபூதோ நிராமய:, அம்ருதம்விரஜம்சுத்தம் ஆத்மாநம் ப்ரதிபத்யதே’ என்று கீழ்ச்சொல்லப்பட்ட தியானத்துக்கு பலத்தைச்சொல்லி, நிவ்ருத்திதர்மநிஷ்டனாப் நிஷ்காமனான ஜாபகன் தேஹாவஸாநத்தில் ப்ரஹ்மகாயத்தை ப்ரவேசிக்கிறான். அவ்விடத்திலுள்ள போகத்தை இச்சியாதபக்ஷத்

தில், அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமாத்மாவை அடைகிருன் என்று பீஷ்மராலே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஜாபகனுக்கு மூர்த்தந்யநாடியாலே நிஷ்க்ரமணத்தை யும், இருநூறுவது அத்தியாயத்தில் '𑌅𑌥𑌤𑍌𑌸𑌹𑌿𑌤𑍌𑌰𑌾𑌜𑌨𑍍' 'அத தௌ ஸஹிதௌ ராஜந்' என்று தொடங்கி, '𑌤𑌾𑌲𑍁𑌦𑍇𑌶𑌮𑌥𑍋𑌦𑍍𑌭𑌿𑌦𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌸𑍁𑌮𑌹𑌤𑍀 𑌜𑌗𑌾𑌮 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑌂 𑌤𑌦𑌾। 𑌹𑌾𑌹𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑌤𑍋𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌮𑌹𑌾𑌨𑌭𑍂𑌤𑍍। 𑌤𑌜𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍𑌤𑌦𑌾' 'தாலுதேசமதோத்தாள்ய ப்ராஹ்மணஸ்ய மஹாத்மந:, ஜ்யோதிர் ஜ்வாலாஸுமஹதீஜகாம த்ரிதிவம் ததா, ஹாஹாகாரஸ்ததோதிக்ஷு ஸர்வேஷாம் ஸுமஹாநபூத், தஜ்ஜோதிஸ் ஸ்தூயமாநம் ஸ்ம ப்ரஹ்மாணம் ப்ராவிசத்ததா' என்கிற சுலோகங்களாலே மூர்த்தந்ய நாடியாலே நிஷ்க்ரமணத்தையும் ப்ரஹ்மகாய ப்ரவேசத்தையும் சொல்லியிருக்கிறது. இப்படிச் சொல்லும்பக்ஷத்தில் '𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌥 𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑍇' 'தஸ்யதாவதேவ சிரம் யாவந்நவிமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே' என்கிற சுருதியில் ஸத்வித்யாநிஷ்டனுக்கு சரீரவியோகாநந்தரம் உடனே ப்ரஹ்ம ப்ராப்தி சொல்லியிருக்கிறது கூடும்படி எங்ஙனேயென்னில், ப்ரா ரப்த சரீரத்தினுடைய முடிவில் உபாஸகனுடைய ப்ரஹ்மப்ராப்தி யில் விளம்பமில்லையென்பதை ப்ரதிபாதிக்கதல்லது விதியாபலமாய் வருகிற அவாந்தரபலாநுபவம் இல்லையென்று சொல்லவில்லை.

அப்படிச் சொல்லும் பக்ஷத்தில் அந்த சுருதியிலேயே தக்ஷிணா யநம்ருதனுக்கும் உத்தராயண ம்ருதனுக்கும் அர்ச்சிராதிகதிமத்யத் தில் சந்த்ரஸாயுஜ்யம் ஆதித்ய ஸாயுஜ்யம் இவைகளைச்சொல்லியிருப் பது கூடாது. ஆனல் வேதாந்ததீபத்தில் அர்ச்சிராதிகெதியாலே போகிறவர்களுக்கு விளம்பமில்லையென்று சொல்லியிருப்பதாலும் அப்படியே கார்யாதிகரண ச்ருதப்ரகாசிகையில், '𑌅𑌰𑍍𑌚𑌿𑌰𑌾𑌦𑌿𑌗𑌤𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑌮𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌾𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌗𑌮𑌯𑌤𑍀𑌤𑌿 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌨𑌤𑍁𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌗𑌮𑌯𑌤𑍀𑌤𑌿' 'அர்ச்சிராதிகதஸ்ய க்ரம முக்தை: ச்ருதிஸித்தத்வாத் ஸத்யநாந் ப்ரஹ்மகமயதீதிஹி ச்ருதி: நதுக்ரமேணகமயதீதி' என்று அர்ச்சிராதி கெதியுள்ளவனுக்கு க்ரமமுக்தி சுருதிஸித்தத்தை, அந்தசுருதியில் 'க்ரமேணகமயதி' என்றில்லாமையால் என்று நிரூபித்திருப்பதாலும் ஜாபகனுக்கு

மூர்த்தந்யநாடியாலே நிஷ்க்ரமணம் இல்லையென்றும் ஜிஹ்வையில் நின்றும் நிஷ்க்ரமணமென்றும் அதில் ப்ரமாணங்களான சுலோகங்களை உதாஹரித்திருப்பதினாலும் (அதாவது 'ஜாபகோபாக்யாநே ப்ரஹ்மகாயம் ப்ரவிஶதோ ஜாபகஸ்ய ஜிஹ்வயா நிஷ்க்ராந்தஸ்ய மூர்த்தந்யநாட்யா நிஷ்க்ரமணாபாவாத் அர்சிராதிகத்யபாவ: ஸ்புடதர:; 'அதவா நேச்சஸே தத்ர ப்ரஹ்மகாயநிஷேவணம் உத்க்ராந்திஞ்ச மார்க்கஸ்த: ஹீதீபூதோ நிராமய:' இதி ப்ரஹ்மகாயநிஷேவணமநிச்சத: முக்திமார்க்கஸ்ததயா உத்க்ரமணவசநாச்ச', (ஜாபகோபாக்யாநே ப்ரஹ்மகாயம் ப்ரவிசதோ ஜாபகஸ்ய ஜிஹ்வயா நிஷ்க்ராந்தஸ்ய மூர்த்தந்யநாட்ய நிஷ்க்ரமணாபாவாத் அர்ச்சிராதிகத்ய பாவத: ஸ்புரதர:; 'அதவாநேச்சஸேதத்ர ப்ரஹ்மகாய நிஷேவணம் உத்க்ராந்திச மார்க்கஸ்த: ஹீதீபூதோநிராமய:' இதிப்ரஹ்மகாய நிஷேவண மநிச்சத: முக்திமார்க்கஸ்ததயா உத்க்ரமணவசநாச்ச') என்று அர்ச்சிராதிகதி யுள்ளவர்களுக்கு மத்யே விளம்பமில்லையென்பது ஸ்பஷ்டமாயிருப்பதால் இப்படிச்சொல்லுமது அநுபபந்நமன்றே என்னில்; கார்யாதிகரணத்தில் பூர்வபக்ஷியாலே 'ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே' 'ப்ரஹ்மணஸ்ஸஹதேஸர்வே' என்கிற ப்ரமாணத்தை அவலம்பித்து அர்ச்சிராதிகதியாலே போகிற எல்லோருக்கும் சதுர்முகனை யடைந்தபின்பு கிரமமாக ப்ரஹ்மப்ராப்தி சொல்லப்பட்டிருப்பதால் அதை நிராகரிப்பதற்காக அர்ச்சிராதிகதியாலே போகிற எல்லோருக்கும் கிரமமுக்தியென்று சொல்லுவது அநுபபந்நம். சிலர்க்கு க்ரமமுக்தி யிருந்தபோதிலும் எல்லோருக்கும் என்பது கூடாது என்று உபபாதித்ததேயொழிய அர்ச்சிராதிகதியுள்ள எல்லோருக்கும் க்ரமமுக்தியில்லை என்பதில் தாத்பர்யமில்லை. அப்படிச் சொல்லும்பக்ஷத்தில் கீழ்ச்சொன்ன அநுபபத்திகள் வருமாகையால் அது அநுபபந்நம்.

ஜாபகோபாக்யானத்தில் ஜாபகனுக்கு மூர்த்தந்யநாடி நிஷ்க்ரமணமில்லை. ஜிஹ்வையாலேயே நிஷ்க்ரமணமென்று உபபாதித்திருப்பது பாரதத்தில் எந்தப்பாடத்தை அவலம்பித்தோ தெரியவில்லை. இப்போது பட்யமானமான பாரதக்ரந்தத்தில் மூர்த்தந்யநாடி நிஷ்க்ரமணம் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிதமாயிருக்கிறது.

ஆக கீழ் உதாஹ்ருதங்களான ப்ரமாணங்களாலும், உபபத்திகளாலும் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனான கேவலனுக்கு அவாந்தரபலம்

ஆத்மாநுபவமும், ஸாக்ஷாத்பலம் ப்ரஹ்மப்ராப்தியு மாகவேணு மென்பது உசிதமாகையால் கைவல்யம் அநித்யம்; அதற்கு புனரா வ்ருத்தியில்லை; என்று சொல்லுமதுவும், திரும்பி ஸம்சாரத்திற்கு வாராமலே பகவத்ப்ராப்தி வருவதால் புனரவரோகாபாவபர மென் றறியத்தக்கது. என்றிவ்வாறு பரபக்ஷ வியவஹாரம் அநுவதிக்கப் பட்டன. இனிமேல் இவைகளுக்கு பரிஹாரங்கள் நிரூபிக்கப்படு கின்றன.

தொடரும்.

ஸ்ரீ:

'அருள்கொண்டாடுமடியவர்' வ்யாக்யானம்.

[ஸ்ரீவானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானுயெழுந்தருளி யிருந்தவரும், ஸ்ரீ. உ. வே வித்வான் பக்ஷிராஜையங்கார் குமாரருமான வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(61-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்படி, பகவத்விஷயத்தை நெகிழவும் ததீயவிஷயத்தை மேன்மையாகவும் கொண்டாடுகைக்கு மற்றொன்றும் உண்டு. அதா வது:— ஒரு ஆசார்யன் சிஷ்யனுக்கு உபகரிப்பதாவது "தத்விஜ்ஞா நார்த்தம் ஸகுருமேவாபி கச்சேத், ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" "தத்விஜ்ஞானார்த்தம் ஸகுருமேவாபி கச்சேத், ப்ரோவாசதாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்றும், 'ஞான மனுட்டானமிவை நன்றாகவேயுடைய, னானகுருவையடைந்தக்கால்' என்றும் சொல்லப்படுகிற இத்யாதி ப்ரமாணத்தின்படியே இவன் ஒரு ஸதாசார்யனை ஆச்ரயித்தால் அவன் இவனுக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்து "நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி" "நிரஞ்ஜந:பரமம் ஸாம்ய முபைதி" என்றும் "ஸோச்நுதே ஸர்வான் காமான் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா" "ஸோச்நுதே ஸர்வாந்காமாந் ஸஹப்ரஹ்மணாவி பச்சிதா" என்றும், "ஜகத்வ்யாபார வர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச" "ஜகத்வ்யாபார வஜம் ப்ரகரண தஸந்நிஹிதத்வாச்" என்றும், "தம்மையே யொக்கவருள்செய்வர்" என்றும்,"அடியார் நிலாகின்ற வைகுந்தமோ

வையமோதும் நிலையிடம்” என்றும், “ஆண்மின்கள் வானகமாழியான் தமர்” என்றும், “நமது விதிவகையே, ஆழியானருள் தருவானமைகின்றான்” என்றும் சொல்லுகிறபடியே உபய விபூதியையும், உபயவிபூதிநாதனையும் இவனிட்ட வழக்காயிறே கொடுப்பது.

ஆகையால் “𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌸 𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌚𑌰𑌰𑍂𑌪𑍀 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃” “ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாந்சரரூபீ ந ஸம்சய:” என்றும் “𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮” “குருரேவ பரப்ரஹ்ம” என்றும் இத்யாதிகளால் ஆசார்யனைக் கொண்டாடுகிறது. இந்த விசேஷத்தைப் பிட்டிறே ஈசுவரனும் ஈசுவரத்வத்தை நெகிழவிட்டு ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு ஸகலரஹஸ்யங்களையும் உபதேசித்து அதன் மூலமாய் “𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌂” “லக்ஷ்மீநாதஸமாரம்பாம்” என்று குருபரம்பரையில் முதலில் ஓதப்படுகிறான்.

அவதாரிகை முற்றுப்பெற்றது.

அருள்கொண்டாடுமடியவரின்புற
அருளினனவ்வருமறையின்பொருள்
அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினன்
அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கதே.

அருள்கொண்டாடும் இத்யாதி:—“பாலேய்தமிழரிசைகாரர்பத்தர் பரவுமாயிரம்” என்றும், “அடியார்க்கின்பமாரி” என்றும், “தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்” என்றும், “கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்” என்றும், “எங்ஙனே சொல்லினுமின்பம்பயக்கும்” என்றும் ஆழ்வாரருளிச்செய்த இவற்றை நினைத்திருக்கிறது. ஆழ்வார் “அருள்பெறுவாரடியார்” என்றதை இவர் ‘அருள்கொண்டாடுமடியவர்’ என்கிறார். அவர் ‘அடியார்க்கின்பமாரி’ என்றதை இவர் ‘அடியவரின்புற’ என்கிறார். அருள்கொண்டாடுமடியவர் — அருள்கொண்டாடுமடியவராயிற்று இங்குள்ளார். ஆழ்வார் ‘வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்’ என்கையாலே ஆழ்வார் பாசுரத்தின் ரஸமறிந்து அதைக்கொண்டாடுவார் அவ்விபூதியிலுள்ளாராயிற்று.

பகவத்ப்ரஸாதத்தையே தங்களுக்கு ஸர்வஸ்வம்மாய் ஸத்தாஹேதுவாய் நினைத்திருக்குமவர்கள். அவர்களார்கிறார், நம்மாழ்வாரை அடியொற்றினமற்றஆழ்வார்கள். அடியொற்றினபடிஎங்ஙனேயென்னில்;—நம்மாழ்வார் முதலில் ‘மயர்வறமதிநலமருளினன்’ என்று

தொடங்கி 'ஒன்றெனக் கருள்செய்ய வுணர்த்தலுற்றேன்' என்னு மளவாகப் பலவிடங்களிலும் பகவத்ப்ரஸாதத்தையே தமக்கு ஸத்தா ஹேதுவாக ப்ரஸ்தாபிக்கையாலே. மற்ற ஆழ்வார்களும் 'முதலாய, நல்லானருளல்லால் நாமநீர் வையகத்துப், பல்லாரருளும்பழுது' என்றார் ஒருவர். 'அருள்புரிந்தசிந்தையடியவர்மேல்வைத்து' என்றார்ஒருவர். ஒருவர் 'அருளாதொழியுமே' என்றார். ஒருவர், 'அருள் முடிவதாழியான்பால்' என்றார். ஒருவர், 'நின்னோடுமொக்கவழிபடவருளினாய்' என்றார். ஒருவர், 'நின்னருளேபுரிந்திருந்தேன்' என்றார். ஒருவர், 'மற்றவள்தன், அருள்நினைந்தேயழுங்குழவியதுவே போன்றிருந்தேனே' என்றார். ஒருவர், 'பாழியானுழியானருளே', என்று தொடங்கி 'மேகவண்ணாவிண்ணவர்தம்பெருமானே' என்று முடித்தார். 'அடியேனையுய்யக்கொண்டதே' என்றார் ஒருவர். இவர்கள் இன்புறுகையாவது.— 'பாலேய்தமிழரிசைகாரர் பத்தர் பரவும்' என்கிறபடியே ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியை ஸதா சிந்தித்து ஆநந்த நிர்ப்பரராகை.

அன்றிக்கே அருள் என்பது ஆழ்வார் ப்ரஸாதமாம். அதைக் கொண்டாடுமடியவராகிறார் மதுரகவிகள். "எண்டிசையுமறியவியம்புகேன், ஒண்டமிழ்ச் சடகோபனருளையே" என்று முற்பாட்டில் கொண்டாடினாரிறே. இவர் இன்புறுகையாவது.— "தென்குருகூர் நம்பியென்றக்கால், அண்ணிக்குமமுதூறுமென்னாவுக்கே" என்று சுக்காம்பரல்போலே சுஷ்கமான நாவிலே யமுதூறும்படியான ஆழ்வார் திருநாமத்தையே சொல்லிப் "பாவினின்னிசைபாடித்திரிவனே" என்று திருவாய்மொழியையே பாடித்திரிதலாயிற்று. இப்பொருள் கொள்ளும்போது 'அருள்கொண்டாடுமடியவர்' என்ற பன்மையை ஒருமையாக்கிக் கொள்ளவேணும். அதவா, 'நம்புவார்பதிவைகுந்தம்' என்று பின்புள்ளாரையும் சேர்த்து அருளிச்செய்கிறாராகவுமாம். அதவா, 'அருள்கொண்டாடுமடியவர்' என்று நம்மாழ்வார் தம்மையே சொல்லிற்றாகவுமாம். இவரின்புறுகையாவது.— 'எங்ஙனமுதல்வந்துதப்புதலின்றி' என்றும், 'இன்கவிபாடும் பரமகவிகளால், தன்கவி தான் தன்னைப்பாடுவியாது, நன்குவந்தின்று தன்னுடனாக்கியென்னால் தன்னை, வன்கவிபாடுமென் வைகுந்தநாதனே' 'பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடி' என்றும் தம்கவிகளைத் தாமே அநுஸந்தித்து 'கவிசொல்லவல்லேற்கினிமாறுண்டே' என்று இப்புடைகளிலே விஸ்மயமடைந்து கொண்டாடிப்பேசுகை. "பெரா

க: ஶ்லோகத்வமாகத:” “சோக:ச்லோகத்வமாகத:” என்று வால்மீகிபகவான் ‘ஓ நிஷாத’ ‘மாநிஷாத’ பத்யத்தையே சொல்லிச் சொல்லி விஸ்மயமடைந்தாப்போலே. இந்தயோஜனையிலும் அடியவர் என்ற பன்மையை ஒருமையாக்கி யோஜித்துக்கொள்ளவேணும். அன்றிக்கே ‘கேசவன் தமர்’ என்ற திருவாய்மொழியின்படி பின்புள்ள சிஷ்யர்களையுஞ் சேர்த்துச் சொன்னதாகவுமாம்.

அன்றிக்கே அருள்கொண்டாடு மடியவரென்று சிறந்த தமிழ்ப் புலவர்களை நினைத்ததாகவுமாம். இவர்கள் இன்புறுகையாவது:- திருவாய்மொழியை நிரந்தரமாக அப்யஸித்து ‘குறுமுனிவன் முத்தமிழு மென்குறளுநங்கைச், சிறுமுனிவன் வாய்மொழியின்சேய்’ என்றும்; ‘பெருமானடிசேர் வகுளாபரணன், ஓராயிரமாமறையின் தமிழின் ஒரு சொற்பொருமோ வுலகிற் கவியே’ என்றும், ‘தென்குருகூர்ப் புனிதன் கவியோர், பாகத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப் பராஞ்சுடரே’ என்றும் திருவாய்மொழியைக்கொண்டாடிப் பேசுகை.

இவையெல்லாம் கிடக்க; பகவத் ப்ரஸாதத்தையும், ஆழ்வார் ப்ரஸாதத்தையும் உஜ்ஜீவனமாகக்கொண்டிருக்கிற பின்புள்ள அஜ்ஞரான அஸ்மதாதிகள் ‘பசு நற்கன்றது தோற்கன்றுக்கு மிரங்குமாப் போலே, ‘கேசவன் தமர்’ படியே ஆழ்வாரோடு ஸம்பந்தமுடைய அடியோங்களுக்கும் இரங்கியருளவேணும்’ என்று பகவத் ஸந்நிதிகள்தோறும் திருமுன்பே நின்று தொண்டர்க்கமுதாய் வானவர்களுக்குச் செவிக்கினிதான அவரது பொய்யில் பாடலான செஞ்சொல்லை ‘ஹாவு ஹாவு ஹாவு’ ‘ஏதத்ஸாமகாயந் நாஸ்தே’ என்றாப்போலே சொல்லி முறையிட்டு ஆநந்த நிர்ப்பரராகை.

தொடரும்.

ஸ்ரீ:

முயற்சி.

உலகில் முயற்சியுடையாரே சிரியராகக் காணப்படுவார். இது, யாவரும் விரும்பிக்கைபாரு மவற்றுளெல்லாம் தலைசிறந்ததாயிருக்கும். அறப்பெரிய காரியமெல்லாம் முயற்சியினால் சாதிக்கக்காண்கிறோம். பகீரதன் முதலானோர் எத்துணையோ அரிய காரியமெல்லாம் செய்து முடித்தாரென்பதும் முயற்சியினாலல்லவா! சிறியார் தம் சிறுமையும் வினையின் அருமையும் கண்டகலாதிருக்க அவ்வினை முடிதற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி உண்டுபண்ணித் தருமன்றே.

"தாளாண்மையென்னும்தகைமைக்கட்டங்கிற்றே
வேளாண்மையென்னும்செருக்கு."

எல்லாருக்கும் உபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு, முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின் கண்ணே நிலைபெற்றது; என்றதனாலும் இதன்பெருமை அறியலாகும். மேலும், தன் சுகத்தைக் கருதாது வினை முடித்தலையே விரும்புவான் தன் நண்பர்க்கும். உறவினர்கட்கும் ஓரரணாக விளங்குவான். முயற்சியில்லாதவன் தன்னையும் பாதுகாத்துக்கொள்ளுதற்கியலாது அலைந்து திரிவான். ஆகவே செல்வத்தையடைதற்கு முயற்சியும், வறுமையுறுதற்கு அஃதின்மையும் காரணமாகும்.

"முயற்சிதிருவினையாக்குமுயற்றின்மை
இன்மைபுகுத்திவிடும்."

என்பதும் இங்கறியத்தக்கது. இதுநிற்க;

ஊழ்வந்தியைந்தவிடத்தல்லது மெய்வருந்திச் செய்யும் முயற்சி பயன்படுவதில்லை என்று கருதவேண்டா. முயற்சியுடன் ஊழும் வந்து பொருந்தியபோது முயற்சி, தன்னளவின்மிக்க பயனைத்தருவதாயிருக்கும். ஊழ்வந்து பொருந்தாதவிடத்து முயற்சி மெய்வருத்தத்தின் அளவிற்கேற்ற பயனைத்தருவதல்லது பாழாவதில்லை. இன்னும்,

"நதியின்பிழையன்றுநறும்புனலின்மையற்றே
பதியின்பிழையன்றுபயந்துநமைப்புரந்தாள்
மதியின்பிழையன்றுமகன்பிழையன்றுமைந்த
விதியின்பிழையிதற்கென்னைவெகுண்டதென்றான்."

என்று இளையபெருமாள் கைகேயி சூழ்ச்சிசெய்ததறிந்து கடுங்கோபங்கொண்டு 'இனி உலகில் பெண்கள்தலையெடுக்கவொட்டாது செய்வேன்' என்று யுத்தசன்னத்தராய் நின்றபோது சக்ரவர்த்தித்திருமகன் 'இது விதியினால் விளைந்ததொன்றாயிருக்க இதற்கு நீ வெகுண்டதாலாயபயனென்?' என்றுகூறினார். இத்தகைய ஊழையும் முயற்சியுடையர்வெல்வர். ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்காமையிற் பலகால் முயல்வார் பயனெய்துவாரென்பதில் ஐயமில்லை.

"ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றித்
தாழாதுஞற்றுபவர்"

என்றதனாலுமறியலாம். மேலும், விடாமுயற்சியால் ஊழையும் வெல்லலாம் என்பதற்கு மார்க்கண்டேயன் விருத்தாந்தமும் போதிய சான்றாகுமன்றோ! நல்லஊழ் இருந்தவிடத்தும் முயற்சியில்லா

தொழியுமேல் ஊழும் பயன் தருவதில்லை என்பதற்கு உதாரணமாக இங்கு ஒரு பழமையான கதையும் உரைக்கப்பெறும். அதுவருமாறு:—

தர்மபுத்திரர், பீஷ்மரை நோக்கி 'அரசன் எதைச் செய்யவேண்டும்? எந்தக்கார்யத்தைச் செய்தால் அவன் சுகமடைவான்? அதை எனக்கு உண்மையாகச் சொல்லவேண்டும்' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். தர்மபுத்திரரே! அரசர்க்கு மெய்முயற்சி இன்றியமையாததாகும். இதை விடாதுசெய்வானுகில் சுகவாழ்வடைவான். இதைத் தாழவிடுவானேல் துன்புறுவான். இது விஷயத்தைப்பற்றிய ஒரு ஒட்டகத்தின் கதையைக் கேள்விப்பட்டுளேன். அதையும் இங்கு உமக்கெடுத்துரைக்கிறேன்; கேட்பீராக என்று சொல்லத்தொடங்கினர்.

பிரஜாபதியின் குலத்திலுதித்ததும், முற்பிறப்பின் அறிவுள்ளதுமான ஒருபெரிய ஒட்டகம் காட்டில் நியமத்தோடு கடுமையான தவம் செய்துகொண்டிருந்தது. அப்பொழுது பிர்ம்மா இந்தத் தவத்திற்குவந்து பிரத்யக்ஷமாகி ஒட்டகத்தை நோக்கி 'நீ விரும்பிய வரத்தைக் கேட்பாய்' என்று கூறினர். ஒட்டகம் பிர்ம்மதேவரே! என்னுடைய கழுத்து நூறுயோஜனைக்குமேல் அதிகமாக இருக்க வேண்டும்; இந்நிலைமையோடு நான் சஞ்சரிக்க விரும்புகிறேன்; இதை நீர் அநுக்ரஹிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தது. பிர்ம்மாவும் அவ்வாறே வரமளித்துச் சென்றர். அதன்பின் ஒட்டகம், 'நாம் பிர்ம்மதேவரின் அநுக்ரஹம்பெற்றுளோம்; நமக்கு யாது குறைவுளது?' என்று தனக்குட்கருதி யாதொரு முயற்சியுஞ் செய்யாது இரைதின்னவும் விருப்பின்றி வாளாவிருந்தது. பின்பு பசியின் கொடுமையால் வருத்தமுற்று நூறுயோஜனை நீளமுள்ள தன் கழுத்தை நீட்டிக்கொண்டு சஞ்சரிக்கத் தொடங்கியது. அப்பொழுது பெருங்காற்றுண்டாக இது, தன் தலையையும், கழுத்தையும் ஒரு குகையில் வைத்துக்கொண்டிருந்தது. அதுசமயம் மிகுதியாக மழையும் பொழிந்தது. அம்மழைக்காற்றாக ஒரு நரி தன் மனைவியுடன் அந்தக் குகையில் பிரவேசித்தது. பசியினல் பீடிக்கப்பட்ட அந்த நரி ஒட்டகத்தின் கழுத்தைக்கண்டு களிப்புற்று அதை உண்ணத்தொடங்கியது. ஒட்டகம் தனக்கு ஆபத்து நேருவதைக்கருதித் தன் நீண்ட கழுத்தைச் சுருக்கிக்கொள்ள முயல்வதற்குள் நரி தன் மனைவியுடன் உண்டுகளித்துச் செல்லவே ஒட்டகம் உயிர் துறந்தது. சோம்பலாலன்றோ இப்பெருங்கெடுதி விளைந்தது. ஆகலால் சோம்பலை அடியொடுகளைந்து முயற்சியுடையீராய் இனிது வாழ்வீராக என்று கூறினர்.